★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்

மற்றும்

சுபமூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய

சோபனா
ரெக்ஸ்ரைல்

16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,

றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள

சோபனா
ரெக்ஸ்ரைல்

16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஞூ பங்குனி மீ 08 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 23 (21-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 39

### சுப நேரம்

21 - 3 1990
புதன் கிழமை பங்குனி 8
சுபநேரம்:
4-48 முதல் 6-18 வரை
இராகுகாலம்
12-18முதல் 01-48வரை

# வடக்கிலிருந்து இந்தியப்படை

# முற்றாக வாபஸ்!

## திருமலையிலிருந்து சனியன்று விலக இராணுவத் தளபதி உத்தரவு!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடபகுதியில் எஞ்சியிருந்த இந்திய அமைதிப்படை நேற்று முற்றுமுழுதாக வாபஸ் பெறப்பட்டது. இறுதிப்படை அணி நேற்றுக் காலை காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் இந்தியா புறப்பட்டது.

இதேவேளை திருகோணமலையில் மிஞ்சியிருக்கும் இந்தியப் படை அணியை எதிர்வரும் சனியன்றுவாபஸ் பெறுவதற்கான உத்தரவை இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி. என். சர்மா நேற்று புதுடில்லியில் விடுத்தார்.

இந்தியப்படை நேற்று காங்கேசனிலிருந்து வெளியேறுவதை இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, இந்திய அமைதிப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் ஆகியோர் பார்வையிட்டனர்.

அதற்கு முன்னர் தாயகம் திரும்பும் இந்திய அணிக்கு இலங்கை இராணுவ அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் பான்ட் வாத்திய இசை முழங்க, இந்தியப் படையினரை ஏற்றிக்கொண்ட கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து வெளியேறியது. (உ-ஒ-எ)

### நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

இலங்கை வங்கி காங்கேசன்துறைக் கிளையில் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது. [ஒ-3]

## காசோலை மோசடி! பொதுமக்களே உஷார்!!

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்தாபனங்கள், தொழில் நிறுவனங்கள், கம்பனிகள் மற்றும் கடைகள் ஆகியவற்றிலிருந்து ஊழியர் சேமலாப நிதியில் வரவு வைப்பதற்காக கொழும்புக்கு அனுப்பப்படும் காசோலைகள் மோசடி செய்யப்பட்டு அதன் பெறுமதி பெருந்தொகையாக மாற்றப்பட்டு பணமாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் இந்த மோசடி இடம்பெற்றிருப்பதால் —

வடபகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் அண்மைக்காலத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு அனுப்பிய காசோலைகள் உரிய தொகைக்கு ஊழியர் சேமலாபநிதியில் வரவு வைக்கப்பட்டிருக்கிறதா. என்பதைஒரு தடவை உறுதி செய்து கொள்வது நல்லது.

இலங்கை வர்த்தக வங்கியின் யாழ் கிளையில் கணக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உவையளை கூண்டோடு பிடிச்சு கம்பி எண்ண வைக்க வேணும் பாருங்கோ......!

### யாழ். உ அ. அ. பிரிவு:

## பயிலுநர் ஆசிரியர் பட்டியல் இன்று வெளியாகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து தெரிவான 97 பயிலுநர் ஆசிரியர் விவரம் அடங்கிய இறுதிப் பட்டியல் இன்று வெளிவர இருக்கின்றது.

உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும், கோட்டக் கல்வி அலுவலகத்திலும் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும்.

யாழ் பிரிவில் மட்டும் முஸ்லிம் பாடசாலைகளுக்கென விசேடமாக 4 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-3)

### உள்ளே பட்டியல்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவான 97 பயிலுநர் ஆசிரியர் விவரம் உள்ளே

## பரந்தன் இரசாயன ஊழியர் வேலை நிறுத்தம்

கிளிநொச்சி, மார்ச் 21

பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

''தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தியை ஆரம்பி'', ''தொழிற்சாலையை தொடர்ந்து தேசிய நிறுவனமாக இயக்கு'', ''கூட்டுத்தாபன தலைவரின் தீர்மானத்தை செயற்படுத்து'' போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

மூன்று நாட்களுக்கு இந்த அடையாள வேலை நிறுத்தம் தொடரும் என வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளும் இலங்கை வர்த்தக, கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஒ-76)

## இதுவரை புனரமைப்பு நிதி யாழ் ஆஸ்பத்திரிக்கு இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 21

கடந்தகால வன்செயல்களின்போது பெருமளவு சேதமுற்ற பொது ஸ்தாபனங்களில் யாழ். போதனா வைத்தியசாலையும்ஒன்று. ஆனால் அதைப் புனரமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு எத்தவித உதவியும் வழங்கவில்லை.

யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி க. சண்முகம் இத்தகவலை வெளியிட்டார்.

ஆஸ்பத்திரியின் வார்ட்டுகள் சேதமுற்றன. மதில்கள்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

### சாதாரண சட்டத்தின் கீழ்

## 14 ஆயிரம் கைதிகள் மீது வழக்குத் தாக்கலாகும்!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும்தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 14 ஆயிரம் கைதிகள் மீது சாதாரண சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்படும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படமாட்டாது என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

குற்றங்கள் நிரூபிக்காதவர்களை அரசு விடுதலை செய்து வருவதாகவும் அந்த அமைச்சர் சொன்னார். (ஒ-எ)

# அன்னைபூபதிநினைவாக எழுச்சிமிகு நிகழ்ச்சிகள்!

## தமிழ்ப் பிரதேசம் எங்கும் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

உண்ணா நோன்பிருந்து உயிர்த் தியாகம் செய்த அன்னை பூபதியின் நினைவாக தமிழ்ப் பிரதேசம் எங்கும் எழுச்சி நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் அன்னை உண்ணாநோன்பிருந்த ஒரு மாத காலத்தை — மார்ச் 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 19ஆம் திகதி வரையான காலத்தை — எழுச்சித் தினங்களாகக் கொண்டாட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் எழுச்சி நிகழ்ச்சிகள் முழு அளவில் ஆரம்பமாகிவிட்டன. வடக்கில் இந்நிகழ்ச்சிகளை பெரிய அளவில் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் நல்லூரில் தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்த அதே இடத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சிப் பகுதியிலும்

உண்ணா நோன்பு இருந்து தியாகமரணம் அடைந்த அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கிளிநொச்சிப் பகுதி எங்கும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அடையாள உண்ணாவிரதங்கள், அஞ்சலிக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வீதிகள் தோறும் வாழைகள் நடப்பட்டு தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. சந்திகள் மற்றும் பாடசாலைகள், பொது ஸ்தாபனங்களில் அன்னை பூபதியின் படம் வைக்கப்பட்டு குத்துவிளக்குகள் ஏற்றப்பட்டுள்ளன. (ஒ-76)

## அடகு நகைகள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 21

மக்கள் வங்கியில் பணம் செலுத்தப்பட்டும் இதுவரை மீளளிக்கப்படாத நகைகள் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காக அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படும் என்றும் —

அவற்றை மீளளிப்பது தொடர்பான நடைமுறைகள் குறித்து அடுத்த வாரத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

அடகுநகைகளை மீளளிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளரும் தேசிய ஊழியர்சங்க (ஜாதிக

(5 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத்துக்கான

## புலிகள் கட்சியின் செயலகம் கோண்டாவிலில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

கோண்டாவிலில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட செயலகம் நேற்று காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

தியாகி திலீபனின் தந்தை குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.

மில்லரின் தாயார் இறந்த போராளிகளின் நினைவாக இங்கு அமைக்கப் பட்டுள்ள நினைவுத் தூபியைத் திறந்து வைத்தார்.

புலிகள் முன்னணியின் தலைவர் திரு. மாத்தயா நிர்வாகக் காரியாலயத்தைத் திறந்து வைத்தார்.

இந்தச்செயலகம் காலை 8. 30 மணிமுதல் 12. 30 மணி வரையிலும், பின்னர் 1. 30 மணிமுதல் 5 மணிவரை திறந்

(5ஆம் பக்கம் பார்க்க)

# காஞ்சிப் பெரியவரிடமிருந்து பிரபாகரனுக்கு ஆசிச் செய்தி!

யாழ்ப்பாணம், மார்ச் 21

இலங்கைத் தமிழ் மக்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஆசிச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் மானஸீக சீடர் ஷிஓம்ஷர் சுவாமிகள் தற்போது இலங்கை வந்திருக்கிறார். அவரே மேற்படித் தகவலை வெளியிட்டார்.

சுவாமிகளின் ஆசிச் செய்தியை தெரிவிப்பதற்காகவும், சுவாமிகள் திரு. பிரபாகரனிடம் ஒப்படைப்பதற்காகத் தமிடம் தந்திருக்கும் ஸ்ரீ சக்ரம் மற்றும் உருத்திராட்ச மணி ஆகியவற்றை அவரிடம் வழங்குவதற்காகவும், தாம் திரு. பிரபாகரனைச் சந்திக்க இருப்பதாகவும் அவர் சொன்னார்.

இலங்கையரான இளம் சுவாமி ஷிஓம்ஷர் ரிஷிகேசத்திலும் பின்னர் சிலகாலம் காஞ்சியிலும் தங்கியிருந்துவிட்டு அண்மையில் இலங்கை திரும்பினார். தற்போது அவர் நீர்வேலியில் தங்கியிருக்கிறார்.

ஈழப்பிரச்சினை குறித்து காஞ்சிகாமகோடி பெரிய சுவாமிகள் நன்கு உணர்ந்திருப்பதாகவும் —

'இலங்கையில் சைவமும், தமிழும் என்றும், என்றும் உயர்ந்து வாழும்' என்று சுவாமி ஆசி தெரிவித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

திரு. பிரபாகரன் ஒரு காளி உபாஸகர் என்று குறிப்பிட்ட சுவாமி ஷிஓம்ஷர், அவரை தாம் நேரில் சந்தித்து காஞ்சிகாமகோடி பீடாதிபதியின் ஆசியை அவருக்கு தெரிவித்து, பீடாதிபதியின் சார்பில் தாம் அவரை ஆசீர்வதிக்க இருப்பதாகவும் சொன்னார்.

ஒரு தலைவனுக்கு வழங்கப்படும் ஆசி, அந்தத் தலைவனைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் வழங்கப்படுவதாக அமையும் என்றும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி எம். பி. யின் மறுப்பு

சுதந்திரக் கட்சி எம். பி. அனில் முனசிங்கா யு. என். பியில் சேர்ந்து போக்குவரத்து அமைச்சராவாரா?

இதனை வெறும் வதந்தி என்று திரு. அனில்முனசிங்காவே மறுத்தார்.

மத்தகமவில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் திரு. முனசிங்கா இதனைத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் மின்சக்தி துணை அமைச்சர் மெர்வின் ஜே. கூரேயும் கலந்து கொண்டார். [ஒ-எ]

## எம். பி. பதவியிலிருந்து 'ரட்ணா' இராஜினாமா!

கொழும்பு, மார்ச் 21

ஈரோஸின் முக்கிய பிரமுகரும், ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த யாழ். மாவட்ட எம். பியுமான திரு. இ. இரத்தினசபாபதி தமது எம். பி. பதவியை இராஜினாமாச்செய்துள்ளார்.

தமது சொந்தக் காரணங்களுக்காக கடந்த மார்ச் 14 ஆம் திகதி முதல் அவர் தமது பதவியை இராஜினாமாச் செய்திருப்பதாக நாடாளு

(5ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சரவை புத்தாண்டில் தெரியும்!

கொழும்பு, மார்ச் 21

புத்தாண்டுடன் ஒட்டியே புதிய அமைச்சரவையை ஜனாதிபதி பிரேமதாஸா அறிவிப்பார் என்று அறிய வருகிறது.

அமைச்சரவையின் தற்போதைய பலம் மேலும் நான்கால் அதிகரிக்கப்படும் என்று தெரிகிறது.

நான்கு புதிய முகங்கள் அமைச்சரவையில் இடம் பெறும். அதே நேரத்தில் பழைய முகாம்களில் எவரும் அமைச்சரவையில் இருந்து நீக்

(5ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உயர் இன அல்சேஷன் 1 வயதுடைய ஆண் நாயும், நாய்க் கூடும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு குறிஞ்சி பார்மசி அன்குறோசறி, No 3, மொடேர்ன் மார்க்கட், திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. (2884)

Hyline சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச்சேவல் குஞ்சு, புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். லக்கி பாம் சுவுஸ் மதவடிவேள் திருநெல்வேலி. (12078)

## 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

## கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(Unsexed) தனி சிகப்பு கறுப்பு சேவல் (பிலிமத் கறுப்பு வரிசேவல் (Lohmann) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் 21-3-1990 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய். இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) ( 12055)

## தேவை

லலிதா ஜுவல்லறி, 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மேற்படி ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. ஊழியர்களாகவும், கணக்கு பகுதிகளுக்கும் தேவைப்படுவதால் உங்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் பெற்றோருடனும் நேரில் வரவும். யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை தரப்படும். நிர்வாகம். (2891)

உடைகளுக்கு பில் எழுதிக் கொடுக்கவும், உடைகள் பில்லுடன் சரிபார்த்துக் கொடுக்கவும். ஒரு ஆள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சிறிலங்கா றைக்கிளினேர்ஸ் கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (2890)

பலாலி வீதி, கொண்டாவில் சந்திக்கும், வேம்படிச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகை 1500/க்குள் தேவை. முற்பணம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு வி. இலக்கம் C/o N/o 651, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (2869)

## தவறிவிட்டது

சிவகுரு தவராசா ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரமும், தேசிய அடையாள அட்டையும் 02-03- 90 அன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (12062)

690541963V இலக்கமுடைய ஆறுமுகம் - புஸ்பராசா சங்கானை மேற்கு, சித்தன்கேணி விலாசமுடைய அடையாள அட்டை 11-3-90 இல் சித்தன்கேணிக்கும் திருநெல்வேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் மேற்கண்ட விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (2894)

## வகுப்புக்கள்

Radio T. V. Air-Conditioning Refregeration' வயரிங், வெல்டிங், பைண்டிங், பிளம்பிங், மோட்ட மெக்கானிசம் Typing, Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை, அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. (12064)

## For Sale

Bajaj Scooter for sale one owner in good condition 35, Bankshall Street, Jaffna. (2883)

## Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

## SPOKEN ENGLISH

ஆங்கிலம் இலகுவில் பேசப் பழக உதவும் கைநூல்கள் Series 1-7 தயாரிப்பு S.B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (11977)

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
## புவனேஸ்வரி கைலாயபிள்ளை
(குரும்பசிட்டி)


தோற்றம்: 03 - 10 - 1927        மறைவு: 21 - 03 - 1989

உறக்கமின்றி எமை வளர்த்து
கண்மணி போல் எமைக்காத்து
பசியாற உணவு தந்து
உள்ளம் நிறைவுகண்ட அன்னையே
உற்றாரையும் மற்றாரையும்
பாசத்தால் அரவணைத்து
இன்முகத்தால் துயர் துடைத்த
தெய்வத்தின் தெய்வமே
எம் கண்ணிலும், இதயத்திலும் நிலைத்துவிட்ட
தங்களது ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார் உறவினர்.

(C-4114)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## கருணாந்தன் சந்திரமௌலி

அன்னை மடியில்: 02 - 02 - 1959        ஆண்டவன் அடியில்: 19 - 02 - 1990

மௌனங்களோடு உன் இனிய நாமமும்
கலந்து கொண்டதோ!...... - எம்
மௌனிப்புக்கள் எல்லாம் உன் பயணத்துக்கும்
இறுதிப் பாதை காட்டியதோ!...... - இனியும்
மௌலீயவனைக் கண்ணுறக் காண்பதும்
எப்போதோ!...... - எனியும்
மௌலீயவனின் புன்சிரிப்பும் எமக்கும்
கிடையாதோ!...... இல்லை பிரியாதோ!......

அப்பா, அம்மா, மனைவி,
சகோதரர், சித்தப்பா, சின்னம்மா,
மாமா, மாமி, உற்றார், உறவினர்.

26, சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம். [12073]

# பனை வெல்லம்

பனை வெல்லம் உடலுக்கு மிகவும் நல்லது. நன்மை பயப்பது. டாக்டர் உறில்க்கையா, பனை வெல்லத்தை உபயோகிப்பதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

1. மெலிந்து, தேய்ந்து, வாடிய குழந்தைகளின் உடலை பனை வெல்லத்திலுள்ள ''குளுக் கோஸ்'' சீராக்குகிறது.
2. கணைச்சூடு நீங்கும்.
3. கருவுற்ற பெண்களுக்கும்' மகப்பேறு பெற்ற தாய்மார்களுக்கும் ஏற்ற உணவு.
4. இரத்த அழுத்தத்தைத் தடுக்கிறது.
5. கன்னிவாத சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதி உடையவர்கள் சாப்பிடலாம். இது மிகவும் எளிதில் செமித்து இரத்தத்துடன் கலக்கின்றது.
6. இதயத்தை வலுவடையச் செய்கிறது.
7. கல்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளிலிருந்து இரத்தக்கசிவு ஏற்படுவதைத் தடுக்கிறது.
8. நெஞ்செலும்பு தள்ளிய குழந்தைகளுக்கு சிறந்த பாதுகாப்பானது.
9. இரும்புச் சத்து பித்தத்தை நீக்குகிறது.
10. சொறி, சிரங்கு, ஜலதோஷம் முதலியவைகளை நீக்குகிறது.

தகவல்:
பனை அபிவிருத்திச் சபை.

(C-4066)

# கொம்பியூட்டர் கல்வி

BASIC
d BASE III +
LOTUS 1, 2, 3
Word Processing

புதிய வகுப்புகள் 30-03-90 முதல் ஆரம்பம்

- ★ Lectures by the Members of the Institute of Data Processing Management (London)
- ★ Practicals on I. B. M (Compatibles)
- ★ Valuable Certificate on Completion of Course
- ★ Attractive Fees
- ★ தமிழிலும் விளக்கங்கள்

(C. I. M. A, I. A. B Book-Keepers),
Shorthand & Typing
நடைபெறுகின்றன.

For further details please contact

## School of Business Administration

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street
(West of OLR Church)
Jaffna.

[C-4103]

# 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரர் திரு. நாகலிங்கம் வேலாயுதம் (துரை)

தோற்றம்: 03 - 08 - 1927        மறைவு: 07 - 04 - 1983

திதி: 21 - 03 - 1990

சீரான சிந்தையையும் சிரித்த உங்கள் இன் முகத்தையும் எங்களால் மறக்கமுடியவில்லை. அன்பும் பண்பும் பாசமுமாய் எம்மை வளர்த்து பாதி வழியில் பிரிய முடியாமல் பிரிந்து- விட்டீர்களே! ஏழாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை வாட்டுகின்றன.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சூராவத்தை,
சுன்னாகம். (C/4117)

# வெற்றிடம்

- ★ சவர்க்காரம் செய்வதில் அனுபவம் உள்ளவர் தேவை.
- ★ அனுபவத்துக்கும் திறமைக்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.

நேரில் வரவும்:

## ★ த பெனின்சுலா குரூப் ★

அரஸ்கோ கட்டடம்
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[சி-4043]

# காணவில்லை

குணரத்தினம் ரமேஸ் வயது 9 கடந்த ஒன்றரை வருடகாலமாக காணவில்லை. இவருக்கு தந்தையார் இல்லை. தாயருடன் வளர்ந்து வந்தார். தாயாரும் வாய்பேச மாட்டார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் அறியத்தரவும்.

ஆ. சுப்பிரமணியம் (குலமணிதேவி)
விநாயகபதி
குப்பிளான், ஏழாலை
(2925)

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# வெற்றிடம்

கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அங்கத்தவர் தொடர்பு கல்வி உத்தியோகத்தர், சம்பளத்திட்ட இல. 201 : 10 — 855 - 30X7 — 40X8 - 1385
2. சாரதி சம்பளத்திட்ட இல. 312 : 12 — 760 - 25X10 — 35X5 - 1185
3. சாரதி சம்பளத்திட்ட இல. 312 : 13 — 730 - 20X10 — 25X5 - 1055
4. எரிபொருள் நிரப்புனர் சம்பளத்திட்ட இல. 313 : 14 → 700 - 15X10 — 20X5 - 950

(சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.)

- ★ கல்வித்தகைமை பற்றிய விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் ரூபா 2/- செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ விண்ணப்ப முடிவு திகதி 15 - 04 - 1990

பொதுமுகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

[சி-4070]

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் ஆறுமுகம் இராஜபட்சம்

தோற்றம்: 25 - 04 - 1919        மறைவு: 31 - 03 - 1989

[ஓய்வு பெற்ற முன்னாள் பெருந்தெருக்கள் பகுதி அதிபர் Retd Director of T. C. E. O. சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய ஆலய அபிவிருத்திச் சபைத் தலைவர்.]

தன் அயராத உழைப்பினால் கடமை தவறாது எம்மை வழமுடன் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
திருமதி ராஜேஸ்வரி இராஜபட்சம்
குடும்பத்தினர்

''ராஜகிரி''
தொல்புரம், சுழிபுரம். [2928]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப் பேதைக்கு அமர்த்தன கண்.

**பொருள்:**

பெண்தன்மை உடைய இந்தப் பேதைக்குக் கண்கள் கண்டவரின் உயிரை உண்ணும் தோற்றத்தோடு கூடி ஒன்றோடொன்று மாறுபட்டிருந்தன.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

21-03-1990 த. பெ. இலக்கம் : 25


## சட்டவிரோத மின்சாரம்

வவுனியாவில் சட்டவிரோத மின் பாவனையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வவுனியா நகரசபை நிர்வாகம் திடீர் சோதனைகளை நடத்தி சில அரிசி ஆலைகளுக்கு அபராதமும் விதித்துள்ளது.

இரவு வேளைகளிலும் திடீர் சோதனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இது போன்ற நடவடிக்கைகள் உடனடியாக சகல உள்ளூராட்சிச் சபைகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மின்சார மோசடி இரு விதங்களில் நடைபெறுகின்றது.

ஒன்று சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவது. அதாவது மின்மானி எதுவும் இன்றி வீதி மின்கம்பங்களில் இருந்து அல்லது பிற வீடுகளில் இருந்து மின்சாரம் பெறுவது.

மற்றது மின்மானியில் மோசடி செய்து மின்சார பாவனைக்கு ஏற்ற கட்டணம் செலுத்துவதில் இருந்து தப்பித்துக் கொள்வது.

யாழ்ப்பாணத்திலும் மின்சார மோசடிகள் பெரும் அளவில் இடம்பெற்று வருகின்றன.

இதனால் பல உள்ளூராட்சிச் சபைகள் லட்சக்கணக்கான பணத்தை மின்சார சபைக்கு நிலுவையாகச் செலுத்த வேண்டி உள்ளது.

யாழ். மாவட்டம் மட்டும் 15 கோடி 20 லட்சம் ரூபாவை மின்சார சபைக்கு நிலுவையாகச் செலுத்த வேண்டி இருப்பதாகப் புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது. இதில் யாழ். மாநகரசபையின் நிலுவை மட்டும் 4 கோடி 50 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் யாழ். மாநகரசபைக்கு 30 மாதகால மின்சார நிலுவையும் இருந்து வருகிறது.

3 மாத நிலுவைக்கு மேல் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் அபிவிருத்தி வேலைகளைச் செய்யப் போவதில்லை என்று மின்சார சபை அறிவித்துவிட்டது;

இதனால் பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகள் மின்சார அபிவிருத்தி வேலைகள் எதனையும் பெற முடியாத பயங்கரமான நிலை தற்போது உருவாகி வருகிறது

இந்த நிலையில் இருந்து உள்ளூராட்சிச் சபைகள் தப்புவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பே பிரதானமாகும்.

மின்சார சபைக்கு உள்ளூராட்சிச் சபைகள் பல கோடி ரூபாக்களைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு இரு காரணங்கள் உள்ளன.

★ ஒன்று சடந்த கால வன்செயல்களின்போது பலர் தமது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியது. அத்துடன் சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருந்ததால் சட்டவிரோத மின்பாவனையும் பெரும் அளவு அதிகரித்திருந்தது.

★ மற்றது மாவட்ட சபைகள் இயங்கிய காலத்தில் உள்ளூராட்சிச் சபைகளிடம் இருந்து அவற்றால் வசூலிக்கப்பட்ட மின்சாரக் கட்டணங்கள் மின்சார சபைக்குச் செலுத்தப்படவில்லை, இதில் பெரும் அளவிலான பணம் மாவட்ட சபைகளால் வேறு வேலைகளுக்குச் செலவிடப்பட்டுவிட்டது.

தற்போது யாழ் மாவட்டத்தில் சாவகச்சேரி உள்ளூராட்சிச் சபைக்கு மட்டுமே மின்சார நிலுவை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது, ஏனைய உள்ளூராட்சிச் சபைகளும் இதன் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

## நல்லை ஆதீனம் நடத்தும் முத்தமிழ்ப் போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 21

நல்லைஆதீனத்தில் 29-4-90 முதல் 8-5-90 வரைநடைபெறவுள்ள திருநெறிய தெய்விக மாநாட்டையொட்டி அந்நாட்களில் பாடசாலைகளுக்கிடையே இயல், இசை, நாடகப்போட்டி ஒன்று நடத்தப்படும். பாடசாலைஒவ்வொன்றும் 75-90 நிமிடத்துக்கானதும், சைவசமயப் பெருமையை மையமாகக்கொண்டதுமான முத்தமிழ் நிகழ்ச்சியைத் தரும். முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் 9-5-90 விழாவில் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்28-3-90க்கு முன் ஆதீனத்தில் கிடைக்க வேண்டுமென அறிவிக்கப்படுகிறது. [சு]

### மஹா கும்பாபிஷேகம்

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் கோவில் ஸ்ரீ நடராசர் மஹா கும்பாபிஷேகம் நாளை நடைபெறும்.

இன்று மாலை 3 மணியளவில் அனுக்ஞை, விநாயகர் வழிபாடு, வாஸ்து சாந்தி, மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், பிம்பம் தான்யாதி வாசங்கள், நயனோன்மீலனம், ரக்ஷா பந்தனம், கடகஸ்தாபனம்,யாகசாலைப் பூஜை, பூர்ணாகுதி என்பன இடம் பெறும். (க-ச)

# சொத்து விவரங்களை ஜூன் 30க்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்

கொழும்பு மார்ச் 21

சொத்துக்களையும்பொறுப்புக்களையும் வெளிப்படுத்தும் சட்டத்தின் கீழ் 1990 ஆம் ஆண்டுக்கான சொத்துக்கள் தொடர்பான விவரங்களை ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.

பத்திரிகையாளர்கள் உட்பட 13 வகைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் இவ்வாறு சொத்துக்கள் பொறுப்புக்கள்பற்றிவிவரங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

இதுதொடர்பானசுற்றறிக்கைகளைநீதிநாடாளுமன்ற விவசாரஅமைச்சுசகலஅமைச்சுச் செயலாளர்களுக்கும் திணைக்கள தலைவர்களுக்கும், மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

இச்சட்டத்தின் பிரகாரம் தமது சொத்துக்களை வெளியிடாதவர்கள் தொடர்பான சகல விவரங்களையும் அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின் பிரகாரம் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் நீதிபதிகளும் நீதிமன்ற அதிகாரிகளும், கூட்டுத்தாபன, திணைக்களதலைவர்கள், இயக்குனர்கள் உறுப்பினர்களும், பத்திரிகை நிறுவனஅதிபர்கள், ஆசிரியர்கள் ஆசிரிய பீட உறுப்பினர்களும் இவ்வாறு தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிட வேண்டும் என அந்த அறிக்கையில் விவரமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. (இ-2)

## நிதி உதவி செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 21

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்ய நிதிகளை வழங்குமாறு ஸ்ரீலங்கா வர்த்தகப் பெருமக்களை வேண்டியுள்ளது

சங்கத்தின் தலைவர் அனுப்பிய கடிதம் ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தகப் பெருமக்கள் தவிர, டாக்டர்கள், நியாயவாதிகள் ஆகியோருக்கும் நிதி உதவி கோரி வேண்டுகோள் விடுக்கப்படும் என அறிய வருகின்றது

பெப்ரவரி மாதத்தின் ஆரம்பத்தில் செய்யப்பட்ட இந்த வேண்டுகோளை அடுத்து பல நிதி அன்பளிப்புகள் கிடைத்துள்ளதாக பலர் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (சு)

## திருமலையில் சிவில் நிர்வாகம் சீராக இயங்க வழி செய்வோம்

### புலிகள் பொறுப்பாளர் தயா தகவல்

திருகோணமலை மார்ச் 21

திருமலையில்சிவில்நிர்வாகம் சீராக இயங்குவதற்கு எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் திருகோணமலைப் பொறுப்பாளர். திரு. 'தயா' பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார். திருமலை கஸ்கிசன் வீதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் தலைமையகத்தில் வைத்து பத்திரிகையாளர்களை அவர் சந்தித்தார்.

திரு. 'தயா' மேலும் கூறியதாவது:- 'மக்கள் எதுவித பயமோ, அச்சமோ இன்றி நடமாட வேண்டும். இப்போது ஊரடங்கு அமுலில் இல்லை. ஆகவே எதுவித பயமும் இன்றி மக்கள் வீதிகளில் நடமாடலாம்.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவு விநியோகம், மின்விநியோகம், குடிதண்ணீர் விநியோகம், மருத்துவ சேவை ஆகியவை தங்குதடையின்றி நடைபெற வேண்டும்.

இவற்றை உறுதிப்படுத்துமுகமாக நாங்கள் இன்று 10 வாகனங்களை ஆளுநரிடம் கையளிக்கவுள்ளோம். மற்றும் தனியாருக்குச் சொந்தமான வாகனங்களையும் கையளிக்கவுள்ளோம்.

பாடசாலைகள் சீராக இயங்க வேண்டும், மாணவர்கள் முறையாகப் பாடசாலை செல்லவேண்டும் ஆசிரியர்கள் முறையாகக் கல்வி கற்பிக்க வேண்டும். போக்குவரத்து சேவை சீராக செயற்பட வேண்டும். மொத்தத்தில் சிவில் நிர்வாகம் சீராக இயங்கவேண்டும். இவற்றிற்குத் தடையாக இருக்கும் சகல தடைகளையும் நாங்கள் அகற்றுவோம்.

இப்போது வீதித்தடைகளை முற்றாக நீக்கிவிட்டோம்.

மாத்தையாவும், யோகியும் விரைவில் திருகோணமலை வருவார்கள் இவ்வாறு திரு. 'தயா' தெரிவித்தார். (இ-15)

## திருமலையில் புலிக்கொடியுடன் வாகனங்கள் பவனி!

திருகோணமலை, மார்ச் 21

கடந்த சனிக்கிழமை புலிக்கொடிகளுடன் பல வாகனங்கள் திருகோணமலை நகர வீதியில் பவனியாகச் சென்றன.

இந்த வாகனங்களில் விடுதலைப் புலிகள்போராளிகள் பலர் ஆயுதங்களுடன் காணப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் தலைமையகம் அமைந்திருக்கும் கஸ்கிசன் வீதியில் இருந்து இந்த வாகனங்கள் கடற்படைத் தளத்தைச் சென்றடைந்தன.

கடற்படைத் தளத்தில் சனிக்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், அரச உயர்மட்டக் குழுவிற்கும் பேச்சுவார்த்தை நடைபெற்றது தெரிந்ததே. (ஒ-150)

### அடையாளம் காணாத சடலம்

முல்லைத்தீவு மார்ச் 21

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்ட இளைஞனின் சடலம் ஒன்று அடையாளம் காணப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (இ-92)

## காரைக்காலம்மையார் விழா

யாழ்ப்பாணம் மார்ச் 21

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் காரைக்காலம்மையார் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலை இந்துமன்றக் காப்பாளர் ஆசிரியை திருமதி சுந்தரகலாவல்லி சிவபாதசுந்தரம் தலைமையில் விழாவின் முதலாம்கட்ட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சிவத்தமிழ்ச்செல்வி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "சமய வளர்ச்சியில் பெண்களின்பங்கு" பற்றி பேசினார்.

கவிஞர் வே. குமாரசுவாமி காரைக்காலம்மையாரின் பக்தியின் சிறப்புப்பற்றி பேசினார்.

பாடசாலை அதிபர் திரு. தா. இராமலிங்கம் நன்றியுரை கூறினார்.

விழாவின் இரண்டாம் கட்ட நிகழ்ச்சியாக மாணவர் கலைநிகழ்ச்சிகள் மன்றத் தலைவர் செல்வன் த. சிவரூபன் தலைமையில் இடம் பெற்றன. (இ)

## 5 லட்சம் அரச ஊழியருக்கு கஷ்ட நிவாரணக் கடன்

### 6 மாதச் சம்பளம் கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 21

அரசு ஊழியருக்கு கஷ்ட நிவாரணக்கடனாக முன்கூட்டியே ஆறுமாதச் சம்பளத்தை உடனே வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தக் கடனைப்பெற 5லட்சம் ஊழியர்கள் தகுதி பெற்றுள்ளார்கள் என்று பொதுநிர்வாகத் துறைத் துணை அமைச்சுச் செயலாளர் எம். என். ஜுனைது தெரிவித்தார்.

இக்கடனுக்கு 7.2சத வட்டி ஆண்டுதோறும் அறவிடப்படும். மாதச் சம்பளத் தொகையில் 10 சத வீதம் மாதாமாதம் கடனுக்காகக் கழிக்கப்பட்டு கடன் அறவிடப்படும்.

வீட்டுவாடகை நிலுவையைச் செலுத்துதல், இறுதிக் கிரியைகளுக்கான செலவுகள், வெள்ளம், அல்லது தீயினால் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் ஆகியவற்றுக்காக இக்கடன் வழங்கப்படுகிறது,

தங்களில் தங்கியுள்ள உறவினர்கள், பெற்றோர், திருமணமாகாத சகோதர சகோதரிகள் ஆகியோரின் கஷ்டங்களைப் போக்கவும் அரச ஊழியர் இக்கடனைப் பெற முடியும் என்றும் ஜனாப் ஜுனைது தெரிவித்தார். [ஒ-எ)

## அனைத்துதமிழ் குழுக்களையும் ஒற்றுமைப்படுத்துக!

### ஜ. ம. வி. முன்னணி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

அனைத்துத் தமிழர் போராளி அமைப்புக்களையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபடும்படி அமைச்சர் தொண்டமானுக்கு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவாக இம்முன்னணி உள்ளது.

இது பற்றி முன்னணித் தலைவர் திரு. த. சித்தார்த்தன் சொன்னதாவது;

தற்போது தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தி வரும் அமைச்சர் சாகுல்ஹமீது மீது நாம் நம்பிக்கை இழந்து விட்டோம் என்பது இதன் அர்த்தம் அல்ல.

ஆனால் ஒரு குடையின் கீழ் சகல தமிழர் அமைப்புக்களையும் கொண்டு வந்து பேச்சுக்கள் நடத்துவதில் ஏற்படும் அசாதாரண தாமதத்தினால் பொன்னான நேரம் வீணாகின்றது என்பதால் இதனைத் தெரிவிக்கிறோம்.

யாராக இருப்பினும் சரி விஷயத்தை முடித்து வைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. சிறுவிஷயங்களை எல்லாம் விவாதித்துக் கொண்டிருப்பதால் பிரயோசனம் ஏற்படாது.

வடக்கு - கிழக்கில் தோன்றியுள்ள பாரதூரமான நிலையை சமாளிக்க கூட்டு முயற்சி தேவை.

இப்படி திரு. சித்தார்த்தன் கொழும்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (இ-எ)

## அரச துறை வெற்றிடங்களை நிரப்ப அமைச்சு பணிப்பு

கொழும்பு, மார்ச் 21

அரச துறையில் வெற்றிடமாக இருக்கும் பதவிகளை உடனடியாக நிரம்பும்படி சகல திணைக்களங்கள் அரசு சார்பு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் அமைச்சுக்களை பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு பணித்திருக்கிறது.

திறமை அடிப்படையில் மட்டுமே நியமனங்கள் வழங்கப்படவேண்டும்; இதற்காக பரீட்சைகளை பரீட்சைத் திணைக்களம் நடத்த வேண்டும் என்றுஜனாதிபதி பணித்திருப்பதாகவும் அமைச்சர் விஜேக்கூன்சொன்னார்.

1961 ஆம் ஆண்டுக்குப்பின்னர் முதல் தடவையாக இப் [illegible] படையில் அரச நியமனங்கள் இடம் பெறவுள்ளன என்றும் அமைச்சர் சொன்னார்.

அரச துறையில் வெற்றிடமாக உள்ள பதவிகள் பற்றிய விவரம்சேகரிக்கப்பட்டவுடன் பகிரங்கப்போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார். தேவை ஏற்பட்டால் மட்டுமே நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (இ-எ)

### நாய்த்தொல்லை

முல்லைத்தீவு மார்ச் 21

முல்லைத்தீவுப்பட்டின எல்லைக்குள் கட்டாக் காலி நாய்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் பரவலாக விசர் நாய்களும் உலாவுகின்றதால் மக்கள் பீதியடைகின்றனர். (இ-92)

## வாசகர் திருமுகம்

### கல்வளை-ஆலங்குளாய்வீதி

இ. போ. ச. பஸ் ஓடிய கல்வளை, ஆலங்குளாய் வீதி, சுமார் 15 வருடங்களாக திருத்தப்படவில்லை. வீதியில் படுகுழிகள் ஏற்பட்டுள்ளன. அனைத்து வாகனங்களும் வேலி ஓரங்களை பாதையாக அமைத்து ஓடுகின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வீதி அதிகாரசபை அதிகாரிகள் கவனிப்பார்களா?

த. கணநாதன்
சண்டிலிப்பாய்.

### சாப்பாட்டு கடைகள்

சாப்பாட்டுக் கடை சொந்தக்காரர் பின்வரும் விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன் வாழை இலையை ஓடும் நீரில் கழுவவேண்டும். ஒரே தண்ணீர்த்தொட்டியில் மீண்டும், மீண்டும் கழுவுவது பலனளிக்காது. மேசையில் வைத்த இலையை கையால் துடைப்பது ஒரு அசுத்தமான பழக்கம். சாப்பாடு வைப்பவர்கள் அநேகருக்கு காலில் புண், சொறி ஆகியவை காணப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்டோர் பணிக்கெடுப்பது தவிர்க்கப்படல் வேண்டும். தண்ணீர் செம்பை பிடிக்கும் போது ஆள்க்காட்டி விரலை செம்புக்குள் வைப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆர். மகேந்திரன்
உடுவில்

### ரூபவாஹினியின் தமிழ் ஒளிபரப்பு

ரூபவாஹினியின் சிங்களச் செய்தி முடிவில் வேறொரு பிரிவாக உலகச் செய்திகள் ஒளிபரப்பாகி வருகின்றன. இந்த மாதிரி. தமிழில் ஒளிபரப்புச் செய்வதில்லை.

தமிழ்ச் செய்தியின் பின் தமிழிலும் உலகச் செய்திகளை ஒளிபரப்ப நடவடிக்கை எடுப்பார்களா?

கி. மரியநாயகம்
முல்லைத்தீவு.

## நாணய மாற்று விகிதம்

21-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 233 77 | 234.74 |
| 100 | அமெரிக்க டொலர் | 3996.95 | 4003.05 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6427.37 | 6460.33 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2360.49 | 2381.92 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 693.76 | 707.82 |
| 100 | ஜப்பானிய யென் | 26.0628 | 26.3327 |

## கண்டதும் கேட்டதும்

தற்பொழுது மினிபஸ், பஸ் ரயில் பயணங்கள் நெரிசல் மிக்கவை.

ஒரு கால் தவம், மற்றவர் காலில் நிற்பது, உடலை அரைவாசியாக வளைத்து நிற்பது.

— இப்படி பல யோகாசனங்களும் உடற்பயிற்சிகளும்' பயணிகளின் தினசரி வாழ்வின் அம்சமாகிவிட்டன. இதில் ஆண், பெண், முதியோர், இளைஞர் பேதமில்லை.

சிறிய மினி பஸ்சில் ஏறி சீற் பிடித்தவர் நோயாளி வந்தாலும் சரி, கைக்குழந்தையுடன் ஒரு தாயார் வந்தாலும் சரி, அந்தச் சீற்றை விட்டுக் கொடுக்க மாட்டார்; விட்டுக்கொடுக்க முடியாது. நிலைமை அத்தகையது.

இந்தப் போக்குவரத்து நெருக்கடி மனித உடல்களை மட்டும் அல்ல; மனித இதயங்களையும் பெரிதாகப் பாதிக்கின்றது. அது மனிதரின் இரக்க உணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அனைத்துக்கும் சவாலாக அமைகின்றது.

–செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ விலங்கியல் ★
R. ஈஸ்வரதாசன், B. Sc. (Cey.)
21, மணல்தரை லேன், கந்தர்மடம்.
90 A/L பொருளாதார விலங்கியல்
ஆரம்பம் : 21-3-90 புதன் — 4-15 p. m.
90 A/L மீட்டல் வினாவிடை
திங்கள் / புதன் 5-15 p. m
90 A/L வன்கூடு ஆரம்பமாகவுள்ளது.
(C/4110)

உங்கள் தேவை!
எங்கள் சேவை!!
★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான
தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகளுக்கு
★
"ஷிறா" (சேவைப் பகுதி)
இல. 19, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Jaffna English Academy
9, Rakka Lane, Chundikuli, JAFFNA.

TOEFL
(Test of English As A Foreign Language)
Week - End Batch & Week Day - Batch
★ Meticulous Coaching
★ Highest Score Assured.
● DURATION — 3 Months

ESOL
(English for speakers of other languages) - London
ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்குமதே வேளையில் London Certificate பெறக் கூடிய அரிய வாய்ப்பு பரீட்சைகளை Jaffna English Academy யிலேயே எடுக்கலாம்.
Assessment of Answerscripts and Awards of Certificates by Pitmans, London.
★ WorldWide recognition
Week - End Batch: Commencement: 31-03-1990
Week - Day Batch: Commencement: 30-03-1990

EBC
(English For Business Communications)- London.
A course designed to enhance the Candidate's skill in using the English Language in business and professional Correspondence.
★ Assessment of Answerscripts and Award of Certificates from Pitmans, London.
★ Examinations Conducted at Jaffna English Academy.
Week - End Lectures: Commencement: 24-03-1990

Spoken English (For Adults)
Week - End Batch: Commencement: 31-03-90
Week - Day Batch: Commencement: 28-03-90
● DURATION — 3 Months

Higher English Course
Week - End Lectures
★ Shakespeare's Romeo and Juliet
★ Bernard Shaw's Arms and the Man
★ George Eliot's Silas Marner
★ Arthur Miller's Death of a Salesman
★ Modern Short Stories
★ Letter Writing & Precis
★ Selected Poems
★ Essays
★ Comprehension Etc
Lectures by:
Kandiah Navarendran.
[C-4022]

★ சுதந்திரப் பிரகடனம் செய்த

# லித்துஏனியாவில் ரஷ்ய ராணுவம் பாதுகாப்புபணியில் ஈடுபட பணிப்பு!

## கடும் நடவடிக்கை எடுக்க தயாராகிறார் கோர்ப்பச்சேவ்

மாஸ்கோ மார்ச் 20

ஒரு தலைப் பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள லித்துஏனியா மாநிலத்தில் மாஸ்கோவின் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி சோவியத் மத்திய அரசுக்கு ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்று உத்தரவிட்டார்.

லித்துஏனியா மாநிலத்தில் உள்ள அணுசக்தி நிலையங்கள் மற்றும் கேந்திர நிலையங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படியும் சுங்கத் திணைக்களச் சட்டத்தை லித்துஏனியாவில் அமுல் நடத்த சோவியத் கேஜிபி நிறுவனம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதிபர் கோர்பச்சேவ் உத்தரவிட்டிருக்கிறார்.

லித்துஏனியா மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை லித்துஏனியா அரசுக்குக் கைமாற்றும் திட்டங்கள் குறித்து லித்துஏனிய அரசுடன் பேச்சுக்கள் எதனையும் நடத்தவேண்டாம் என்று மத்திய அமைச்சர்களையும் திரு. கோர்பச்சேவ் பணித்திருக்கிறார்.

மத்திய அரசுடனான லித்துஏனியாவின் வர்த்தக மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று லித்துஏனிய அதிபர் திரு. பெர்கிஸ் தெரிவித்தார்.

லித்துஏனியா மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி சோவியத் யூனியனின் கடும் எச்சரிக்கை சோவியத் டெலிவிஷனில் ஒளிபரப்பானது.

சோவியத்யூனியனுடனான பொருளாதார தொடர்பு லித்துஏனியா துண்டிக்க எடுக்கும் நடவடிக்கைகள் சட்ட விரோதமானவையாகவே கணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியான கரன்ஸி, தனியான சுங்கத் திணைக்களம் ஆகியவற்றை நிறுவ லித்துஏனியாவுக்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

இப்படி சோவியத் அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனின் கடும் எச்சரிக்கை லித்துஏனியா பற்றிய பிரச்சினையில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்
வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 1990/91
பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்
★ ஆரம்பம்: 31 – 03 – 1990 ★
க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
கலைமாணி (B. A) விஞ்ஞானமாணி (B. Sc) வர்த்தகமாணி (B. Com)
(புள்ளி விபரவியல்)
விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
★ பல்கலைக்கழக பதிவுகள் யாவும் நிறுவனத்தால் செய்து தரப்படும்.
பதிவாளர்:-
★ ASTAN Institute ★
166/1, Hospital Road, Jaffna.
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1-ஆம் மாடி) [சி-3470]

★ தொழிற் கல்வி ★
★ தமிழ் மாணவர்களின் தற்போதைய நிலைமை கருதி ............
★ எதிர்கால வாழ்வு ஒளிமயமாக ............
★ எலக்ரோனிக் யுகத்திற்கு ஈடுகொடுக்க ........
★ உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கும் உயர்கல்விக்கும் ........
★ பரவி வரும் கம்பியூட்டர் யுகத்தில் நீங்களும் ஒருவராக
GLOBE
Information Systems Services (Pvt.,) ஸ்தாபனம்
வழங்கும்
Diploma in Computer Progrmming & Information Processing
(Equivalent to City & Guilds 747)
Language Basic
இக்கல்வியை கற்க விரும்பும் உத்தியோகத்தர், இளைஞர்கள், யுவதிகளும் உடன் அலுவலகத்தில் ரூபா 10/- செலுத்திப் பெறும் விண்ணப்ப படிவத்தில் 23 – 03 – 1990 க்கு முன் விண்ணப்பிக்கவும்.
ஆரம்பம்: 25 — 03 — 1990
காலம்: வார, இறுதி வகுப்புக்கள் 4½ மாதம்
விரிவுரை: கம்பியூட்டர்துறையில் உள்நாட்டு, வெளிநாட்டு அனுபவமிக்கவரால் தமிழ் / ஆங்கிலம் எனும் இருமொழிகளிலும் கூடிய செய்முறைப்பயிற்சிகளுடன் I. B. M கம்பியூட்டரில் நடாத்தப்படும்.
OFFICE →
Globe Information Systems Service (Pvt.) Limited
Station Road, Chunnakam.
(Near Sivan Temple)
Opened From 4.30 p. m. to 6.00 p. m.
RESIDENCE:
S. AMPIKAPAKAN
Near Skandavarodaya College.
Kandarodai, Chunnakam. [சி-4050]

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சேனாதிராசா பிரேமதரா

| அன்னையின் மடியில்: | அழிப்பு: |
|---|---|
| 10 – 02 – 1966 | 21 – 03 – 1986 |

பாசமலரென பாரினில் வளர்த்தேனே
நேசமுடன் வந்தெம்மை மகிழ்விக்க வந்தாயே
தோசம் வந்ததோ பிரேமா உந்தனுக்கு
மோசம் வரும் என்று நாம் நினைக்க வில்லையம்மா
பந்தமுடன் நாம் இருக்க பரிதவித்துச் சென்றாயோ
சாந்தமுடன் நாம் பாடும் பாடலும் கேட்கலையோ
வந்ததென்ன கனவோ நனவோ
நாம் ஒன்றும் அறியோம்
சொந்தமென நாம் இருந்தோம்
சொர்க்கம் நீ சென்றாயோ

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் நினைவில் வாடும்
அப்பா, அம்மா, அத்தான், அக்கா,
பெறாமகன், அம்மம்மா,
உற்றார், உறவினர்கள்.

50/25, வயிரவர் கோயில் லேன்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். [சி-4045]

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன்
### தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா
### லெப்டினன் சிறைவாசன் (சிறை)

| அன்னையின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 24 – 11 – 1967 | 21 – 03 – 1989 |

திதி: 08 – 04 – 1990

வீரசொர்க்கம் எய்திய செல்வன் தவமணிநாயகம் முரளி கிருஷ்ணா அவர்களின் ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி

தமிழ் மண்ணைக் காக்கவென்று சங்கற்பம் செய்து
சாகும் வரை குறிக்கோளை நிறைவேற்றி வைத்து
ஒன்றரை ஆண்டு வெளிக்கடையில் அடைபட்டு நின்று
ஈழ மண்ணில் உன் குருதி உரமாக வைத்தாய்
களங்கண்டு களிக்கின்ற சிறுத்தையே எம்மை
கண்ணிருள் மூழ்கடித்து வீர சொர்க்கம் கண்டாய்
சித்திரத்தில் தீட்டி உன்னைச் சிலை செய்து வைப்போம்
புத்தகத்தில் போற்றி உன்தன் புகழ் கூறிநிற்போம்.

எங்கள் அன்பு முரளியின் ஆத்ம சாந்திக்கு என்றும் எமது பிரார்த்தனை

பெற்றார், சகோதரர்.

''உதயதாரகை''
மல்லாகம். [2924]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி நிகழ்ச்சிகள்

**21-03-1990**

5.00 நாதாஞ்சலி
5.05 தோத்திரமாலை
5.30 பாமாலை
5.45 சைவ நற்சிந்தனை
5.50 இஸ்லாமிய நற்சிந்தனை
5.55 போதி மாதவனின் போதனைகள்
6.00 வர்த்தக சேவை
6.30 செய்திகள்
6.40 செய்தித்தாள் கண்ணோட்டம்
7.00 வர்த்தக சேவை
7.30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7.45 மாகாணச் செய்திகள்
7.50 வர்த்தக சேவை
8.00 வயலின்
8.15 மெல்லிசைப் பாடல்கள்
8.30 மாதர் மஜ்லிஸ்
9.00 வர்த்தக சேவை
01.00 இசையமுதம்
10.30 கிளாரினட்
11.00 புல்லாங்குழல்
12.00 வர்த்தக சேவை
12.45 செய்திகள்
1.00 வர்த்தக சேவை
6.00 செய்திகள்
6.15 அருளமுதம்
6.30 மகாவலி நிகழ்ச்சி
7.00 களத்துமேடு
7.15 கதம்பம்
7.45 வாத்திய இசை
7 50 உலகச் செய்திகள்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9.00 செய்திகள்
9.20 பக்திப் பாடல்கள்
9.30 கலைப்பூங்கா
10.00 இசைக் கச்சேரி
10.45 பஜன்
11.00 ஒலிபரப்பு முடிவு.

# யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவான பயிலுநர் ஆசிரியர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவான பயிலுநர் ஆசிரியர் விவரம் வருமாறு:

**ஆரம்பகல்வி**

ச. ரஞ்சினாதேவி (யாழ்), இ. இந்திராணி (யாழ்), வ, யூ. சி. பிறெட்றிக் (யாழ்), ச. குயின்வேஜின் (குருநகர்). செ. கீதா (யாழ்), க. தி. கிளிவ்லன்ட் (யாழ்), நா. ஜொய்சிலின் ரமி (யாழ்), ம. கேதாரகௌரி (யாழ்), செ. மரிய அழகேஸ்வரி (யாழ்), ப. அம்பிகை (யாழ்). வி. மு. பிறேமளா (யாழ்), ம. மரியா லொரான்சியா (பசையூர்), இ. சிவபுரத்தரசி (யாழ்), மா. பிரேமிளா (யாழ்), திருமதி. க. நளாயினி (யாழ்), இ. ஊர்மிளா (கொய்யாத்தோட்டம்), பொ. கலாநாயகி (கொழும்புத்துறை), தி. ரேவதி (ஈச்சமட்டை), சி. நிரஞ்சலா (யாழ்), ஏ. ஓ. புவிராஜசிங்கம் (யாழ்), த. ஜெயந்தி (யாழ்), கு. சாந்தினி (கொட்டடி), மேரி ஜெஸ்மின்யே (சண்டிலிப்பாய்), கோ. சியாமளா (யாழ்).

**புத்தசமயம்**

வி. விஜயா (குருநகர்).

**இந்துசமயம்**

க. கனகலிங்கம் (யாழ்), சி. சுகிர்தகுமாரி (யாழ்).

**இஸ்லாம்**

மு. ப. பசிருன்சிறாக் (யாழ்), அ. ற. முகம்மது நஸீர் (முஸ்லீம்கல்லூரிவீதி), ற. அமீரா (யாழ்),

**கிறிஸ்தவம் றோ. க.**

ரு. மரியகொறற்றி (யாழ்), அ. மேர்சி அன்ஜலா (குருநகர்), போ. பிறெக்சிட் (பாசையூர்).

**கிறிஸ்தவம் றோ. க. அல்லாதது**

அ. செ. கிருஸ்தோபர் (யாழ்), சி. பிரான்சிஸ் சேவியர் (யாழ்), மை. ஞானேந்திரன் (யாழ்).

**சிங்களம்**

ஸ். கி. ஜோசப் அனுரா (யாழ்), என் ஸ்ரீ ரஞ்சன் [யாழ்],

**தமிழ்**

டே. மரினா(யாழ்),ப. சாந்தினி [யாழ்], சி. மெலிற்றா ,ரஜனி [குருநகர்], ச. கலாமதி (யாழ்).

**கணிதம்**

க. முத்திலிங்கம் [யாழ்],

**விஞ்ஞானம்**

மே. யோ.அ. அல்போன்ஸ் [யாழ்], வே. மதிவதனி [யாழ்].

**ஆங்கிலம்**

மா. சிவநேசம் (கொட்டடி) வ. தேன்மொழி (வண்ணார்பண்ணை), கே. பி. பத்மசரஸ்வதி (யாழ்), ஜே. ஆ. சாமினி (யாழ்), சி. மாலதி (யாழ்), பி. சே. அ. தவமணி (யாழ்).

**உடற்கல்வி**

சி. பாலேஸ்வரி (யாழ்), யே. ஜக்குலின் றோஸ் (யாழ்), செ. அனுராதா (யாழ்), கு. மாலினி (யாழ்).

**சமூகக்கல்வி**

மு. மி. மேரிசீபா (கொழும்புத்துறை), செ. மரின் கசில்டா (பாசையூர்).

**சித்திரம்**

ம. மேரிறொசலீன்(யாழ்), ந. சத்தியதேவி (யாழ்), ந. சாந்தினிதேவி (யாழ்), வே. உஷாதேவி (யாழ்), மே. சி. இ. பென்ஜமின் (யாழ்), சி. விஜயராணி (கொய்யாத்தோட்டம்), று. ச. பிரிட்டோ (யாழ்), நீ. ரஞ்சினி (யாழ்).

**சங்கீதம்**

இ. சியாமளா (யாழ்), இ. தயாநிதி (யாழ்), நா. நிர்மலாதேவி (யாழ்), க. அமிர்தாஞ்சனா (கொழும்புத்துறை) க. கௌரி (யாழ்), ஐ. மாகிரட் (யாழ்), யோ. மெறோஸ் கிறாசியா (யாழ்.)

**நடனம்**

க. மதீஸ்வரி (யாழ்), ச. ஆனந்தி (யாழ்), ஆ. சு. சுரபி (யாழ்,) நி. பாமதி (யாழ்), கிரிஜா ஜொலிற்றா (யாழ்), இ. ரஞ்சிதகலா (யாழ்), ச. ஆனந்தி (யாழ்), மு. அளற்ஜராங்கனி (யாழ்), அ. சோ. மரியதாசன் (யாழ்).

**விவசாயம்**

அ. பிரான்சிஸ்(பாசையூர்), ம. ஞானபண்டிதர் (யாழ்),

**மனைப் பொருளியல்**

க. அருணா (நாவாந்துறை)

**வர்த்தகம்**

ம. கமலா (குமலா (யாழ்), ஐ. ஜயந்தி (யாழ்), ஞா. செரிஜசிந்தா (யாழ்), மு. முத்துலட்சுமி (யாழ்), செ. மேரிஸ் ரெலா யூஜீன் (யாழ்).

**தட்டச்சு சுருக்கெழுத்து**

யோ. சுறீஸ்து கமலா (யாழ்).

**மரவேலை**

ம. ஜோசப் சுப்றால் (சுண்டுக்குளி).

**வானொலித் தொழில்**

வி. தயாபாலன் (யாழ்).

**மட்பாண்டம்**

பா. துஷ்யந்தி (யாழ்)

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு

**ஆரம்பகல்வி**

திருமதி அப்துல் ஜவாத் ஜெனிமா (யாழ்), திருமதி ச. றிறோசா (யாழ்)

**ஆங்கிலம்**

மு. கா. முகம்மது மண்சிலா (யாழ்).

**சமூகக்கல்வி**

அ. க. சம்சியா (யாழ்).

(இ - 3)


## சித்திரை மாத சுற்றுலா

* இந்தியாவில் உள்ள பிரபல ஆலயங்களைத் தரிசித்தல்.
* தென் இந்தியாவில் கல்வி கற்க விரும்புவோர்க்கு தகுந்த வசதிகள் செய்து கொடுத்தல்.
* பகவான் சாயிபாபாவின் தரிசனம்.

இன்றே நாடுங்கள்

**துர்க்கா தேவி ரூர்ஸ்**

இராமையா செட்டியார் ஒழுங்கை, (சாந்தி தியேட்டர் முன்) யாழ்ப்பாணம்.

கிறீன் ஐலன் பீச் இன் 58A, உபதிஸ்ஸ றோட், கொத்தலாவலை காடன், பம்பலப்பிட்டி.

(C/4119)



## கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

**ஆரம்பம்: 28 Mar 1990**
(திங்கள், புதன், வெள்ளி, வகுப்புக்கள்) 10.30 a.m.

**07 Apr 1990**
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) 11.00 a.m.

★ **Word Processing**

**ஆரம்பம்: 25 Mar 1990**

O/L படித்த இருபாலரும் சேரலாம் மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

Join With us to Study tne Latest Computer Technology




**UNIKCO COMPUTER CENTRE**
No. 5,
Power House Road,
2nd. Lane,
JAFFNA.

[சி-4116]



## மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் 1988/89 (25 - 03 - 1990)

மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவக் கொண்டாட்டங்கள் 25 - 03 - 90 தொடக்கம் 04-04-90 வரை பண்டாரகம மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கின்றன. மார்ச் 25ந் திகதி மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் புலமைப் பரிசில்களை வழங்குவார். இந்த வைபவத்தில் பங்கேற்கும்படி யாழ். பல்கலைக்கழக முதலாம்வருட (1988/89) மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மகாபொல புலமைப் பரிசில் பெறும் முதலாம் வருட மாணவர்கள் அனைவரும் இவ்வைபவத்திற்கு கட்டாயமாகச் சமூகமளிக்கவேண்டும். இதுவரை பெயரைப் பதிவு செய்யாதவர்கள் உடனடியாக புதன் கிழமை (21 - 03 - 90) சிரேஷ்ட மாண ஆலோசகர் அலுவலகத்தில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது சம்பந்தமான அறிவுறுத்தற் கூட்டம் கைலாசபதி கலையரங்கில் வியாழக்கிழமை (22-03-90) மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

**பதிவாளர்.**
யாழ்பல்கலைக்கழகம்.

[C/4072]


## காசோலை ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வைத்திருக்கும் நிறுவனம் ஒன்றின் காசோலைஇப்படிமோசடியாகப் பெருந்தொகைக்கு மாற்றப்பட்டிருப்பதை வங்கி கண்டுபிடித்து காசோலையைத் திருப்பி அனுப்பியிருக்கிறது.

இதேபோல் இலங்கைவங்கியின் யாழ் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் 23 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு மாற்றப்பட்ட காசோலை ஒன்று பணமாக மாற்ற முயற்சிக்கையில் மோசடி அம்பலமாகியிருக்கிறது.

## அன்னை ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் அன்னைபூபதியின் நினைவாக சுழற்சி முறையில் உண்ணாவிரத நிகழ்ச்சிகளை நடத்த பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த உண்ணாவிரதநிகழ்ச்சி அனேகமாக ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தினசரி ஒவ்வொரு பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் இந்த உண்ணாவிரத நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## இதுவரை ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடைந்தன; தளபாடங்கள் அழிக்கப்பட்டன; வைத்திய உபகரணங்கள் பாழாயின.

ஆனால் இவற்றைப் புனரமைக்க புனர்வாழ்வு அமைச்சு எந்த உதவியும் வழங்கவில்லை என்றார் அவர்,

இதுவரையில் அரச அதிபர்கள் ஊடாக 16 இலட்சம் ரூபாவும், சுகாதார அமைச்சு ஊடாக 62 இலட்சம் ரூபாவும் நிதி கிடைத்தது. அந்த நிதியிலேயே அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (உ-3)

## வரதரின் தாயும் உறவினரும் ஒரிஸ்ஸாவில்!

புதுடில்லி, மார்ச் 21

ஒரிஸ்ஸா மாநிலத்தில்அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களில்முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் தாயார், மற்றும் ஏழு நெருங்கிய உறவினர்களும் உள்ளார் என்று இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

## காஞ்சி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சொன்னார்.

காஞ்சிகாமகோடி பீடாதிபதி அவர்கள் அனுப்பி வைத்திருக்கும் ஸ்ரீசக்ரம் மற்றும் உருத்திராடச மணியை திரு. பிரபாகரன் தமது கழுத்தில் அணிந்து கொண்டால் அவருக்கு மேலும் பல ஷேமங்களும் கீர்த்தியும் கிட்டும் என்றும் சுவாமி ஷிஓம்ஷர் தெரிவித்தார். (உ-9)

## புதிய அமைச்சரவை.

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படமாட்டார்கள்.

ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அமைச்சுக்களில் மாற்றம் செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது.

இதேவேளை- தற்போதைய அமைச்சரவையில் உள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்படலாம். என்று தெரிகிறது. (ஒ-எ)

## எம். பி. ———

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மன்றச் செயலாளர் நாயகம் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அண்மையில் கடும் சுகவீனமுற்ற திரு. இரத்தினசபாபதி சிகிச்சைக்காக சென்னை மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

அவர் தற்போது சுகமாகி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

இதேவேளை —

மக்கள் வங்கியின் யாழ் கிளை ஒன்றில் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதிக்கு மோசடியாக மாற்றப்பட்ட இதேபோன்ற காசோலை ஒன்று பணமாக்கப்பட்டிருக்கிறது.

ஊழியர் சேமலாப நிதிக்கு அனுப்பப்படும் காசோலைகள் இடைவழியில் தபால் பகுதியில் திருடப்பட்டு பின்னர் மோசடி செய்யப்படுகின்றதா— அல்லது—

கொழும்பில் ஊழியர் சேமலாப நிதிப் பகுதியில் செயற்படும் ஒரு கும்பல் இந்த வேலையில் ஈடுபடுகின்றதா என்பது தெரியவில்லை.

## அடகு———

(1ஆம் பக்கத் தொடர்ச்)

சி சேவக சங்கமய) தலைவருமான திரு. ஓ. பி. குலசிங்க, மக்கள் வங்கியின் பாதுகாப்பு அத்தியட்சகர் திரு. பி. எம், வீரசிங்க மற்றும் அதிகாரிகள் இந்த விடயம் குறித்து விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்டத் தலைவர்களுடன் திங்களன்று பேச்சுவார்த்தைநடத்தியதாகத் தெரியவருகிறது.

இதயைடுத்தே அடகு நகைகளை மீளளிப்பதற்காக யாழ்ப்பாணம் கொண்டுவருவதுஎன முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. (உ-3)

## புலிகள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரியாலயத்தில் வைத்தே மாநில நிர்வாகம் சம்பந்தப்பட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கென போக்குவரத்து, கூட்டுறவு, கல்வி அரசகூட்டுத்தாபனம், விவசாயம், கடற்றொழில் போன்ற பிரிவுகளுக்கு அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளருக்கும், மக்கள் முன்னணியின் அமைப்பாளருக்கும் தனித்தனியே அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ-9)

# 'றோ'வின் நடவடிக்கை; உள் விசாரணை வேண்டும்

## தி. மு. க. எம். பி கோரிக்கை

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதுவரை இடம்பெற்ற 'றோ'வின் நடவடிக்கைகள் குறித்து இந்திய மத்திய அரசு உள்விசாரணை ஒன்றை நடத்தவேண்டும்.

தி. மு. கழக எம். பி. திரு. வை. கோபாலசாமி புதுடில்லி ராஜ்ய சபாவில் பேசுகையில்முன்கண்டவாறு கோரிக்கைவிடுத்தார்.

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. கோபாலசாமி இந்த வேண்டுகோளை வலியுறுத்தினார்.

இலங்கை நடவடிக்கையில் இந்தியப் புலனாய்வு நிறுவனமான 'றோ' மத்திய அரசின் அனுமதியுடன் இயங்கியதா? அல்லது சுயேச்சையானமுறையில் செயலாற்றியதா என்பதுபற்றிக் கண்டறிய இவ் விசாரணை நடத்தப்படவேண்டும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் உத்தரவின்மீது 'றோ' பணியாற்றி இருக்கலாம். இலங்கைத் தமிழரைப் பிரிக்க லட்சக்கணக்கானரூபா பணத்தை இரகசிய நிதியில் இருந்து 'றோ' செலவிட்டிருக்கிறது - என்று திரு, கோபாலசாமி தெரிவித்தார். (ஒ-எ)

## ஷப்றா ஆதரவுடன்

# தேவார மனனப் போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 18

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதினம்'ஷப்றா' ஆதரவுடன் தேவாரமனனப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. இப்போட்டியில் தேவார மனனம் சிறப்பம்சமாகக் கவனிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

100 தேவாரங்களை மனனம் செய்யும் இப்போட்டிக்கு ஏப்ரல் முதலாந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் எனவும் தேவாரங்களின் பிரதிகளை நல்லை ஆதீனத்திலும், ஷப்றா நிறுவன அலுவலகத்திலும் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்களை ஷப்றா நிறுவனம் வழங்குகிறது.

18 வயதுக்கு குறைந்தவர்கள் இந்தப் போட்டியில் பங்கு பற்றலாம். (இ-3)

## நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அல்லாரை, கச்சாய் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இன்று இலங்கை வங்கி ஆஸ்பத்திரிவீதிக்கிளையில் அமைந்துள்ள விசேட கரும பீடத்தில் வைத்து மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.


## WANTED

WANTED FOR IMMEDIATE EMPLOYMANT CAPANTERS. MASON BARBENDERS IN MARSHALL ISLAND MINIMUM PAY APPROX 500 U. S DOLLARS APPLY TO:

**NO 37, WASALA ROAD, DEHIWELA, COLOMBO.**

(12121) PHONE: 586225



## VACANCY

Vacancy exists for an experienced Building Supervisor with N. D. T. or equivalent with five years experience as a building supervisor. Should be able to handle works at sitei independently.

Salary negotiable.

Apply To:
**EUROVILLE**
Engineers & Constructors (Pvt) Ltd,
449, Stanley Road,
Jaffna.

[2929]



## WANTED

**Y.M.C.A. - COMMERCIAL INSTITUTE**

Instructors in English and Tamil Stenography for immediate appointment

**Application Close: 31st March 1990**

Apply:
**General Secretary**
**Y. M. C. A. Jaffna.**

[12074]



## நன்றி நவிலுதல்

எமது குடும்பத் தலைவர் திரு. K. றிச்செட் சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர் அமெரிக்கன் மிசன் காங்கேசன்துறை) அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து எமது துயரத்தில் கலந்துகொண்டோருக்கும், நல்லடக்க ஆராதனையில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் சிறப்பாக இயங்கிய ஈசன்ஸ் ஸ்தாபனத்தாருக்கும் மற்றும் ஏனைய உதவிபுரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்

61, பாரதிவீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(12076)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதி
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# உதயன்

21 - 03 - 1990 புதன்கிழமை


அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/90
★ Processing செய்தல் இலவசம்,
★ விற்பனை-வர்ண நிழற்பட சுருள்கள்,
★ பட அல்பங்கள், பெற்றறிகள்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் கூறுகிறார்:

# திருமலை கோட்டை அகதிகள் உடன் அகற்றப்பட மாட்டார்கள்

## ஆனால் தமிழ் ஊழியர் அஞ்சத் தேவையில்லை

திருகோணமலை மார்ச் 21
திருகோணமலை 'பிரடெரிக்' கோட்டையில் தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள அகதிகள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள்.

ஆனால் கோட்டைக்குள் உள்ள செயலகத்திற்கு கடமைக்காகச்செல்லும் எல்லா தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் முழுப் பாதுகாப்பு வழங்கப்படும். அதற்குரிய உறுதிமொழியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் எந்தவொரு தமிழ் ஊழியரும் சந்தேகப்படத் தேவையில்லை.

– இவ்வாறு விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை கடற்படைத் தளத்தில் அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

திரு. ரூபன் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் இப்போது சிவில் நிர்வாகம் சீராக இயங்கவில்லை. அது சீராக இயங்குவதற்கு முழு ஒத்துழைப்பையும் விடுதலைப் புலிகள் வழங்குவர்.

இந்தியப்படை வெளியேறியதும் சிங்கள இராணுவத்தினராலும் சிங்களக் காடையர்களாலும் தாங்கள் தாக்கப்படுவார்கள் என்னும் பீதி இப்போதும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகிறது. இவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இப்படியான சூழ்நிலை இனி ஏற்படமாட்டாது. இதற்கான உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் எங்களுக்குள் ஓர் இணக்கமான நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கைப் பாதுகாப்புப் படையினர் மிகக் கவனமாகவும் சாதுர்யமாகவும், அவதானமாகவும் நடந்துகொள்வார்கள் – என்றார்.

[உ–150]

# தனியார் பஸ் சேவைக்கு பழைய இடத்தையே தருக

## ஆணையாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21
தூர இடங்களுக்கான தனியார் பஸ்சேவையை வழமையான இடத்தில் இருந்து ஆரம்பிக்க உதவவேண்டும் என்று மாநகரசபை ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய மினிபஸ் சேவைகள் சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையில்அவர் தெரிவித்துள்ளதாவது:-

'புதிய நடைமுறையின்படி சிங்கள மகாவித்தியாலயக் காணியில் இருந்து தூரஇடங்களுக்கான பஸ் சேவைகளை ஆரம்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. இது உடனடியாகச் செய்யக்கூடிய விடயம்அல்ல.

தற்காலிக ஏற்பாடாக இரவு 7 மணிக்குப் பின்னும் காலை 7 மணி வரையும் தூர இடத்துக்கான பஸ்கள் முந்திய இடத்தில் – அதாவது சுபாஸ்கபேக்கு முன்பாக தரித்து நின்று புறப்பட வசதி செய்யவேண்டும்'–எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ–3)

# போக்குவரத்து நடைமுறைகள் நகரில் நேற்றுமுதல் அமுல்

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ் நகரப்பகுதியில் வீதிப் போக்குவரத்து நடைமுறைகள் நேற்றுமுதல் அமுலுக்கு வந்தன.

இந்த நடைமுறைகள் முழு அளவில் அமுல்நடத்தப்பட்டதாகவும் மக்களின் ஆதரவு பூரணமாகக் கிடைத்ததாகவும் மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்;

மாநகரசபையின் 14 ஊழியர்கள் விசேட உடை தரித்து போக்குவரத்து நடைமுறைகளை அமுல்படுத்தும்பணியில் ஈடுபட்டிருந்தனர். (உ–3)

# ஜீ. சி. ஈ. பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் ஜீ.சி.ஈ (சாதாரண) பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கிறது.

புதியபாடத்திட்டத்துக்கான கூட்டம் காலை 9மணிக்கும், பழைய பாடத்திட்டத்துக்கான கூட்டம் காலை 10.30 மணிக்கும் நடைபெறும்.

இக்கூட்டங்களில் சகல பரீட்சை நிலைய இணைப்பதிகாரிகளையும், உதவி இணைப்பதிகாரிகளையும், மேற்பார்வையாளர்களையும் நிரந்தர நோக்குநர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். [ஒ–3]

# டாக்டர்கள் பற்றாக்குறை நோயாளிகள் பெரும்பாதிப்பு

'நரம்பியல், முறிவுநெரிவு, மார்புநோய், புற்றுநோய் நிபுணர்கள் பற்றாக்குறையால் இங்கிருந்து மாதந்தோறும் இருபதுக்கும் அதிகமான - அதிகம் பாதிக்கப்பட்ட-நோயாளிகள் கொழும்புக்கு அனுப்பவேண்டிய நிலை உருவாகியுள்ளது':

யாழ் போதனா வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி இவ்வாறு கவலை வெளியிட்டார்.

யாழ். வைத்தியசாலையில் இப்பிரிவுகள் முன்னர் இயங்கிவந்தன, ஆனால் அவற்றில் கடமையாற்றிய நிபுணர்கள் தற்போது வெளிநாடுகளுக்குச் சென்றதால், இந் நோய்களுக்கு அவசர சிகிச்சைகள் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள டாக்டர்களினால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கைவிடப்பட்டும் சுகாதார அமைச்சு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ–3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 – 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழத் தமிழ் அகதிகள் பிரச்சினை:

# ஒரிஸ்ஸா சட்ட சபையில் நேற்று அமளிதுமளி!

புதுடில்லி, மார்ச் 21
ஒரிஸ்ஸா மாநிலத்தில் 1600 அகதிகள் வந்திறங்கியது சம்பந்தமாகஅம்மாநில சட்டசபையில் இன்று வாதப்பிரதிவாதங்கள் நடந்தன.

இந்த இலங்கைத் தமிழ் அகதிகள் சம்பந்தமான விவாதமொன்றை சட்டசபையில் நிகழ்த்த பாரதிய ஜனதா உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த தீர்மானம் அவைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டது. அதையடுத்தே சபையில் அமளி ஏற்பட்டது.

[ உ – ச ]

# தப்பியவர்களில் 3 பேர் தலைவர்கள் எனத் தகவல்

புதுடில்லி, மார்ச் 21
ஒரிஸ்ஸா அகதி முகாமில் இருந்து தப்பிச் சென்றவர்களில் ஈ. என். டி. எல். எவ்வைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் ஒன்பது பேரும் அடங்கி இருந்தனர் என்றும் அவர்களில் மூவர் அந்த இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் என்றும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 7 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகளிடம் பிடிபட்டிருந்தார்கள். அந்த எழுவரும் மீண்டும் கோராப்பூர் அகதி முகாமிற்கு அனுப்பப்பட்டார்கள்.

தற்போது முகாமில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள் (ஓ–ச)

கொழும்பில் இயங்கி வந்த

# இஸ்ரவேல் நலன் பிரிவை மூடிவிட ஜனாதிபதி முடிவு!

கொழும்பு, மார்ச் 21
கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தில் இயங்கி வரும் இஸ்ரவேல் நலன்புரிப் பிரிவை மூடிவிடுவது என்று ஜனாதிபதி பிரேமதாஸா தீர்மானித்திருக்கிறார்.

இதனை ஜனாதிபதி நேற்று வெளியுறவுஅமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவுக்குத் தெரிவித்தார்

இஸ்ரவேலுடன் மீண்டும் ராஜதந்திர உறவை ஆரம்பித்துக்கொள்வதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா நிபந்தனை விதித்திருக்கிறார்.

★ இஸ்ரவேல், பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை பலஸ்தீனிய மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனமாக அங்கீகரிக்கவேண்டும்.

★ ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனியப் பிரதேசத்தில் இருந்து இஸ்ரவேல் அதன் துருப்புகளைத் திருப்பி அழைக்க வேண்டும்.

★ மத்தியகிழக்குப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா கூறியுள்ள யோசனையான சர்வதேச மாநாட்டில் இஸ்ரவேல் கலந்துகொள்ள இணங்கவேண்டும்.

இவை அனைத்தையும் இஸ்ரவேல் நிறைவேற்றும் பட்சத்தில், இஸ்ரவேலுடன் இலங்கை மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஆரம்பித்துக் கொள்ளும்.

இதுவே அந்த நிபந்தனைகளாகும்.

கொழும்பு, அமெரிக்கத் தூதரகத்தில் உள்ள இஸ்ரவேல் நலன்காக்கும் பிரிவை எதிர்வரும் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்பதாக மூடிவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி வெளியுறவுச் செயலாளரைப் பணிக்கும்படியும் ஜனாதிபதி, அமைச்சர் விஜேரத்னாவைக் கேட்டிருக்கிறார். [ஓ–எ]

அரச ஊழியர்களுக்கு

# கடனாக 6 மாத சம்பளம்; சுற்றுநிருபம் வந்தது!

யாழ்ப்பாணம், மார்ச் 21
அரசாங்க ஊழியர்களுக்குக் கஷ்ட நிவாரணக் கடனாக ஆறுமாதச் சம்பளத்தைவழங்குவது தொடர்பான சுற்றுநிருபம் யாழ் அரசாங்க செயலகத்துக்கு நேற்று வந்து சேர்ந்தது.

அரசாங்க ஊழியர்களுக்கு இதுவரைகாலமும் மூன்று மாதச் சம்பளப்பணமே கஷ்ட நிவாரணக்கடனாக வழங்கப்பட்டுவந்தது.

இந்தக் கடனை ஆறுமாத காலச் சம்பளத்துக்குச் சமனான தொகையாக அதிகரிப்பதுஎன அரசு முடிவு எடுத்திருப்பது தெரிந்ததே. (உ–3)

# தப்பியோடிய அகதிகள் தமிழகம் வருவார்களா?

## அரசு உஷாராகக் கவனிக்கிறது

சென்னை, மார்ச் 21
ஒரிஸ்ஸா மாநிலத்தில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் ஒருபிரிவினர் தப்பி ஓடியதைத் தொடர்ந்து தமிழ் நாடு அரசு உஷார்படுத்தப்பட்டுள்ளது.

800 அகதிகள் தப்பி ஓடிய பின்னர், ஒரிஸ்ஸாவில் எஞ்சியுள்ள தமிழ் அகதிகளுக்கும் அங்குள்ள பழங்குடி வாசிகளுக்கும் இடையேயான உறவில் பதற்றம் ஏற்பட்டிருப்பதாக ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தப்பி ஓடிய தமிழர்கள் தமிழ்நாடுக்குச் செல்லக்கூடும் என்று ஒரிஸ்ஸா அரசு அதிகாரி சுனந்தா பத்ரா தெரிவித்தார். [ஓ–எ]

# காங்கேசன் மக்கள் வங்கியில் ரூ. 15 ஆயிரம் கொடுப்பனவு

மக்கள் வங்கி காங்கேசன் துறைக் கிளையில் எதிர்வரும் 26ஆம் திகதிமுதல் 29ஆம் திகதி வரை வீடு திருத்துவதற்கான நிவாரணமாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட இருக்கிறது

இந்த நாட்களில் தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவு உடுவில் உ. அ. அ. பிரிவு ஆகியவற்றிலுள்ள கிராம சேவையாளர் பகுதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கி. சே. பிரிவுகள் வருமாறு:-

நகுலேஸ்வரம், கொல்லங்கலட்டி, குரும்பசிட்டி, தெல்லிப்பழை, மல்லாகம் வடக்கு மயிலிட்டி வடக்கு, தையிட்டி அளவெட்டி தெற்கு, புன்னாலைக்கட்டுவன், தாவடி, இணுவில், உடுவில் வடக்கு என்பனவாகும்.

இக்கொடுப்பனவைப் பெறத் தகுதியுடையவர்கள் தத்தமது கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு தொடர் இலக்கம், கொடுப்பனவு பெறவேண்டிய திகதி, தொகை ஆகியவற்றை அறிந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனி பர்ணாந்து வரோணிக்கம்

மண்டைதீவு 4–ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அந்தோனி பர்ணாந்து வரோணிக்கம் 20–3–90 இல் காலமானார்.

அன்னார் அந்தோனி பர்ணாந்துவின் அன்பு மனைவியும், அருட்திரு. மார்செலியார் [பங்குத்தந்தை, பாலையூற்று], மரியதாஸ், அன்ரன் மரியநாயகம், காலம்சென்ற சிறிலம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்திமாசீலி, மேரிறோஸ் ஆகியோரின் மாமியாரும், பிறியா, தயா, யூஜின், அருள்ராஜ், தயானந்தன், அமல்ராஜ் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22–03–1990 வியாழக்கிழமை மாலை 4–00 மணியளவில் புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அருட்திரு. மார்செலியார்
அ.ம.தி.

[12123]

## மரண அறிவித்தல்கள்

### திரு. முத்துத்தம்பி சாம்பசிவம்

(கணக்காளர் – ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை)

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. முத்துத்தம்பி சாம்பசிவம் 19–03–1990 திங்கட்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தவனேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி தில்லைநாயகி பாலசிங்கம் (எழுதுவினைஞர், ஆதார வைத்தியசாலை, மந்திகை), நாகநாதன் (கனடா), வைகுந்தவாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சிவராசா பாலசிங்கம் (மண் பரிசோதகர், நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு), திருமதி அனுஷியா நாகநாதன், திரு. வ. சுப்பிரமணியம் (மின் அதிகாரி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி வசந்தகுமாரி சுப்பிரமணியம், திருமதி விஜயகுமாரி சின்னத்தம்பி (கனடா), திரு. நாகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும், பிரசன்னா, பிரசாத் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'வைகுந்தம்'
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தவர்

[2934]

### பொன்னையா நவரட்ணம்

கொக்குவில் மேற்கு சட்டத்தரணி பொன்னையா நவரட்ணம் 16–ம் திகதி கொழும்பில் காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நிர்மலா, மஞ்சுளா [கனடா], சியாமளா [அமெரிக்கா], இந்திரகுமார் [ஜேர்மனி], செந்தில்குமார் [யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், கேந்திரராசா [பொறியியலாளர், தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை, திருகோணமலை], சிவபாலன் [பொறியியலாளர், கனடா], கலாநிதி மகேஸ்வரநாதன் [அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 22–03–1990 வியாழக்கிழமை மாலை 4–00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
த. கேந்திரராசா
(C/4073)

### திருமதி ஞானாம்பிகை சாம்பசிவம்

கச்சாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கல்வளை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி ஞானாம்பிகை சாம்பசிவம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தபாலதிபர் சதாசிவம் சாம்பசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகமுத்து செல்லத்துரையின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரராசசேகரத்தின் அன்புச் சகோதரியும், வாலாம்பிகையின் மைத்துனியும், குகதாசன், குகராணி ஆகியோரின் அன்பு மாமியும், மகேந்திரன், புஷ்பகாந்தி ஆகியோரின் பெரிய தாயும், கலைச்செல்வி, கருணாகரன், கயல்விழி, ஜெயறூபி, விளங்கதன், குன்றில் குமரன், மாயவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று [21–03–1990] பிற்பகல் 4–00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சங்கம்புலவு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இதனை ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

தகவல்:
க. மகேந்திரன்
[12122]

### திரு. ஆறுமுகம் கந்தையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர் வரணி வடக்கு)

வரணி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. ஆறுமுகம் கந்தையா 19 – 3 – 90 திங்கட்கிழமை சிவபதமடைந்தார். இவர் வரணி சூரிய கறுக்காய்ச் சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவும், காலஞ்சென்ற திரு. திருமதி ஆறுமுகத்தின் மகனும், திருமதி நேசரத்தினத்தின் அருமைக் கணவரும், இரத்தினசோதியின் அருமைத்தந்தையும், திரு. சி. பஞ்சலிங்கம் (பொறியியலாளர், மின்சார திணைக்களம் கொத்மலை) அவர்களின் அருமை மாமனும், பிரியா, துஷன, துவாரகா அவர்களின் அருமைப்பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19 – 03 – 90 திங்கட்கிழமை மாலை வரணியில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூரிய கறுக்காய்ச் சித்திவிநாயகர்
ஆலய தர்மகர்த்தாசபை.

வரணி.

[12080]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org